இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,217, NOVEMBER 22, 1907.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

## LAND SALES.

### காணி விற்பனவுகள்.

No. 537, N. P.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பு, 1907 ம் ஞூ கார்த்திகைமாசம் 16 ந் தேதி.

1908 ம் ஆண்டு தைமாதம் 8 ந் தேதி, மன்னாரில் தன் ஆபிசில் வட மாகாணத்து மன்னார் உதவி கவண்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும்.

107 காணித்துண்டுகள், வட மாகாணத்து மன்னார் டிஸ்திறிக்கின் பெருங்களிப்பற்று பகுதியிலிருக்கிறது.

பெருங்களிப்பற்று. உரித்தாளி—அரசாட்சியார்.

| படம் இல. | காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | று. | பே. |
|---|---|---|---|---|---|---|---|
| 2,915 | 10420 | விடத்தல்தீவு | வீ. வேலுப்பிள்ளை | நெற்காணி | 3 | 1 | 23 |
| | | | இலுப்பைக்கடவைப்பற்று. | | | | |
| 3,294 | 12181 | கட்டாடிவயல் | நெயினுமுகம்மது மீராமெய்யதீன் | பறட்டைக்காடு | 4 | 1 | 36 |
| | | | மாந்தை வடக்கு. | | | | |
| 2,883 | 10343 | நெடுங்கண்டல் | அரசாட்சியார் | நெற்காணி | 0 | 1 | 23 |
| | | | உரித்தாளி—சுவாம்பிள்ளையும் மறுபேரும். | | | | |
| ,, | J 260 | ஷை | அரசாட்சியார் | ஷை | 0 | 2 | 7 |
| | | | உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 2,899 | 10385 | இலந்தைவான் | அரசாட்சியார் | ஷை | 0 | 0 | 36 |
| 2,904 | 10394 | பெரியவிளாங்குளி | அரசாட்சியார் | துறந்தவெளி | 2 | 3 | 25 |
| ,, | 10395 | ஷை | ஷை | ஷை | 2 | 3 | 10 |
| ,, | 10396 | ஷை | ஷை | ஷை | 2 | 3 | 14 |
| ,, | 10397 | ஷை | ஷை | ஷை | 2 | 3 | 15 |
| ,, | 10398 | ஷை | ஷை | ஷை | 2 | 3 | 16 |
| ,, | 10399 | ஷை | ஷை | ஷை | 2 | 3 | 15 |
| 2,983 | 11091 | கண்டல் | க. மாரிமுத்து | பரட்டைக்காடு | 2 | 1 | 18 |
| 3,043 | 11312 | மணிப்புளுக்குளம் | அரசாட்சியார் | ஷை | 4 | 3 | 22 |
| ,, | 11314 | பாலைப்பெருமான்கட்டு | ஷை | ஷை | 3 | 2 | 20 |
| ,, | 11315 | ஷை | ஷை | ஷை | 1 | 1 | 4 |
| ,, | 11316 | ஷை | ஷை | ஷை | 1 | 2 | 28 |
| ,, | 11317 | ஷை | ஷை | ஷை | 3 | 3 | 28 |
| ,, | 11318 | ஷை | ஷை | ஷை | 3 | 0 | 18 |
| ,, 11 | 11 | ஆட்காட்டிவெளி | வளத்திச்சார் பிலிப்பு | வெண்காணி | 1 | 0 | 0 |
| | | | மாந்தை வடக்கு. உரித்தாளி—அரசாட்சியார். | | | | |
| 3,043 | 11319 | பாலைப்பெருமான்கட்டு | அரசாட்சியார் | பறட்டைக்காடு | 2 | 2 | 4 |
| ,, | 11320 | ஷை | ஷை | ஷை | 5 | 0 | 26 |
| ,, | 11322 | ஷை | ஷை | ஷை | 4 | 3 | 28 |
| 3,160 | 11722 | சிறுவிளாங்குளி | க. நெயினுமுகம்மது | ஷை | 11 | 1 | 5 |
| ,, | 11722½ | ஷை | ஷை | ஷை | 8 | 2 | 32 |
| 2,898 | 10382 | பாப்புகடந்தான் | அரசாட்சியார் | நெற்காணி | 0 | 0 | 18 |
| ,, | K 260 | ஷை | ஷை | ஷை | 1 | 2 | 36 |
| 2,933 | 10497 | செட்டியார்மகன் கட்டைக்காடு | ஷை | ஷை | 3 | 0 | 14 |
| 3,331 | 12287 | காங்கண்டல் | ச. பிலிப்பு பறுனந்து | காடு | 1 | 0 | 22 |
| 3,393 | 12447 | ஆட்காட்டிவெளி | டி. டொன் ஜோசேப் | பறட்டைக்காடு | 1 | 2 | 10 |
| 3,297 | 12186 | வண்ணகுளம் | வயித்தி பிலிப்பு | துறந்தவெளி | 1 | 0 | 38 |

மாந்தை தெற்கு.

படம் 2,980. கேள்விக்காரன்—அரசாட்சியார்.

உரித்தாளி— அரசாட்சியார்.

விவரம்—பாழடைந்த நெற்காணி.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| 11057 | பண்டிக்குமிண்டான் | 1 2 23 |
| 11058 | டிெ | 2 1 0 |
| 11059 | டிெ | 1 3 8 |
| 11060 | டிெ | 0 3 23 |
| 11062 | துவரங்கேணி | 4 3 0 |
| 11063 | டிெ | 3 3 32 |
| 11064 | டிெ | 3 3 35 |
| 11065 | டிெ | 3 2 30 |
| 11066 | டிெ | 5 0 0 |
| 11067 | டிெ | 6 3 0 |
| 11069 | டிெ | 3 1 5 |
| 11070 | டிெ | 1 3 15 |
| 11071 | டிெ | 2 0 33 |
| 11072 | டிெ | 2 1 4 |
| 11073 | டிெ | 1 0 6 |
| 11075 | தேத்தாவடிமருதன்குளம் | 2 2 26 |
| 11076 | டிெ | 2 1 0 |
| 11077 | டிெ | 1 0 22 |
| 11078 | டிெ | 1 3 18 |
| 11079 | டிெ | 2 3 17 |
| 11080 | டிெ | 4 3 28 |
| 11082 | டிெ | 3 1 22 |
| 11084 | டிெ | 1 2 27 |

படம் 2,989. விவரம்—காடு.

| | | |
|---|---|---|
| 11126 | வாய்த்தான்குளம் | 2 3 4 |
| 11127 | டிெ | 1 2 17 |
| 11128 | டிெ | 4 0 16 |
| 11129 | டிெ | 1 0 39 |

படம் 2,990. விவரம்—நெற்காணி

| | | |
|---|---|---|
| 11131 | முன்னிப்பள்ளம் | 1 1 2 |
| 11132 | டிெ | 1 1 16 |

படம்—2,993.

| | | |
|---|---|---|
| 11139 | சிறுநாவற்குளம் | 1 1 26 |
| 11140 | டிெ | 0 2 10 |

| காணி இல. | குறிச்சி. | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|

படம்—2,996. விவரம்—புகையிலைத்தோட்டம்.

| | | |
|---|---|---|
| 11147 | கொல்லன்குளம் | 2 0 26 |

விவரம்—நெற்காணி.

| | | |
|---|---|---|
| 11148 | கொல்லன்குளம் | 1 1 25 |
| 11149 | டிெ | 1 0 38 |

படம் 3,002. விவரம்—காடு

| | | |
|---|---|---|
| 11168 | இடாவெட்டிகண்டல் | 4 1 26 |
| 11169 | டிெ | 2 1 31 |
| 11170 | டிெ | 2 3 4 |
| 11171 | டிெ | 4 3 30 |
| 11172 | டிெ | 1 3 12 |
| 11173 | டிெ | 4 0 6 |
| 11174 | டிெ | 4 2 28 |
| 11175 | டிெ | 4 1 38 |
| 11176 | டிெ | 3 3 24 |
| 11177 | டிெ | 4 3 6 |
| 11178 | டிெ | 9 3 24 |
| 11179 | டிெ | 5 2 23 |
| 11180 | டிெ | 9 0 30 |

உரித்தாளி—கிறிஸ்தோகு அந்தோனிதவதோ.

| | | |
|---|---|---|
| T 260 | இடாவெட்டிகண்டல் | 9 1 27 |

உரித்தாளி—அரசாட்சியார்.

| | | |
|---|---|---|
| 11181 | இடாவெட்டிகண்டல் | 3 2 12 |
| 11182 | டிெ | 8 0 36 |
| 11184 | பறங்கிசிறுகுளம் | 0 3 0 |
| 11185 | டிெ | 13 0 25 |
| 11186 | டிெ | 11 1 25 |
| 11187 | டிெ | 11 1 8 |
| 11189 | டிெ | 9 3 23 |
| 11190 | டிெ | 6 1 26 |

படம் 13.

| | | |
|---|---|---|
| 33 | நீலாசேனை | 0 2 20 |
| 20*a* | டிெ | 2 0 14 |

படம் 33. கேள்விக்காரன்—அந்தோனி பேதுரு.

| | | |
|---|---|---|
| 23*b* | நீலாசேனை | 4 0 27 |

படம் 34. கேள்விக்காரன்—வி. ரு. வி. வி. வயிற்றிலிங்கம்

விவரம்—பறட்டைக்காடு.

| | | |
|---|---|---|
| 2*c* | பாலத்தாள்வு | 49 0 10 |

நானாட்டான் கிழக்கு உரித்தாளி—அரசாட்சியார்.

| படம் இல. | காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|---|
| 2,751 | 9797 | கோயில்குளம் | — | காடு | 6 3 0 |
| 2,961 | 10694 | பெரும்பரப்பு | — | நெற்காணி | 2 3 8 |
| 2,964 | 10701 | கொல்லசிறுகுளம் | தொம்மைதியோகு | காடு | 2 3 16 |
| 3,102 | 11528 | அகத்திக்குளம் | — | காடு | 1 0 34 |
| 3,103 | 11530 | பெருச்சார்கட்டு | — | துறந்தவெளி | 1 0 23 |
| | | நானாட்டான் மேற்கு. உரித்தாளி—அரசாட்சியார். | | | |
| 2,595 | 9286 | நானாட்டான் | அந்தோனி பிலிப்பு குருஸ் | காடு | 1 0 9 |
| ,, | 9288 | டிெ | சவிரியல் பேதுரு மாற்கு | காடு | 0 3 37 |
| 2,595 | 10578 | திருமுடிக்கட்டைகாடு | அரசாட்சியார் | நெல்வயல் | 1 2 15 |
| 2,962 | 10698 | கோட்டைக்குளம் மாவிலங்கேணி | அந்தோனி மரிசால் | காடு | 10 0 12 |
| 2,963 | 10699 | வஞ்சியங்குளம் | அரசாட்சியார் | நெல்வயல் | 0 1 18 |
| ,, | 10700 | டிெ | டிெ | டிெ | 0 0 10 |
| 3,115 | 11595 | நொச்சிக்குளம் | முகையதீன் கப்புடையார் | துறந்தகாணி | 1 0 0 |
| ,, | 11597 | டிெ | டிெ | காடு | 8 2 20 |
| 3,162 | 11728 | சிறுசாம்பான்கட்டைக் காடு | சோலைசமையன் | துறந்த காணி | 0 3 22 |
| | | முசலி தெற்கு. உரித்தாளி—அரசாட்சியார். | | | |
| 2,958 | 10589 | தனககன்குளம் | தியோகு இலையப்பன் | வெண்காணி | 3 0 4 |
| 3,076 | 11447 | மாசித்தண்டல் | அரசாட்சியார் | நெற்காணி | 0 1 2 |
| ,, | 11448 | டிெ | டிெ | டிெ | 0 1 15 |
| 3,293 | 12176 | கொண்டச்சி | — | காடு | 66 0 34 |
| | | பனங்காமம். உரித்தாளி—அரசாட்சியார். | | | |
| 3,152 | 11679 | வன்னிவிளாங்குளம் | அ. அனந்தர். | காடு | 1 2 30 |
| | | மேற்குமூலை. உரித்தாளி—இல்லை. | | | |
| 3,305 | 12216 | பாலம்பிட்டி | அ. வயிரமுத்து | காடு | 1 3 38 |

பாணிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 15.

இந்தக் காணிகளைப்பற்றி வேறே காரியங்களறியவேணுமாகில் கவண்மேந்து ஏசன்று இடமும் படங்களைப்பற்றி அளவுகந்தோரின் பெரியதுரையிடமும் அறிந்துகொள்ளலாம்.

மகோத்தமரவர்களினது கட்டளையின்படி,

கிறூ கிளிவ்வோட்,
இராசாங்க விசிதர்.

No. 1,132, E. P.

கொலோனியல் சக்கிறத்தார் ஆப்பிஸ்,
கொழும்பில், 1907 ம் ௵ கார்த்திகைமீ 14 ந் தேதி.

1908 ம் ௵ தைமாதம் 29 ந் தேதி, புதன்கிழமை, பகல் 1 மணிக்கு மூதூர் வாடிவீட்டில் கீழ் மாகாணத்து திரிகோணமலை உதவி கவற்ண்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும்.

33 காணித்துண்டுகள், கீழ் மாகாணத்து திரிகோணமலை டிஸ்திறிக்கின் கொட்டியாபுரப் பகுதியிலிருக்கின்றது.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | தரிப்புவிலை ஏக்கவிசாலம் ஏ. | று. | பெ. | ஏக்கரொன்றுக்கு ரூ. | ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | பிளான் இலக்கம் 3,701. உருத்தாளி—அரசாட்சியார். | | | | | | |
| 93351 | கட்டைபறிச்சான் | பெரியதம்பிசெல்லத்துரை | தென்னைக்கேற்றது | 1 | 1 | 0 | 15 | 0 |
| | | உரித்தாளி—அரசாட்சியார் (தீர்மானஞ்செய்கிறதற்காக). | | | | | | |
| 93352 | ஷை | வீரக்குட்டி தம்பையாவால் கட்டிப்பிடிக்கப்பட்டதரை | தென்னந்தோட்டம் | 0 | 3 | 14 | 25 | 0 |
| | | உரித்தாளி—அரசாட்சியார். | | | | | | |
| 93354 | ஷை | வல்லிபுரம் கந்தப்பர் | தென்னைக்கேற்றது | 6 | 0 | 14 | 15 | 0 |
| 93355 | ஷை | வேலுப்பிள்ளை சண்முகம் | ஷை | 6 | 1 | 34 | 15 | 0 |
| | | பிளான் இலக்கம் 3,837. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | | |
| 93797 | கிளிவெட்டி | கே. வேலுப்பிள்ளை | நெற்கேற்றது | 0 | 3 | 2 | 17 | 50 |
| 93798 | ஷை | ஷை | கேள்விக்காரனாற் கட்டியடைக்கப்பட்ட நெல்வயல் | 2 | 1 | 16 | 17 | 50 |
| | | பிளான் இலக்கம் 3,736. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | | |
| 93497 | மேன்காமம் | கோணமலைபெண் சேதுப்பிள்ளை | கேள்விக்காரனால் கட்டிப்பிடிக்கப்பட்ட நெல்வயல் | 2 | 3 | 20 | 17 | 50 |
| 93499 | ஷை | கே. தங்கம்மா | கேள்விக்காரியால் கட்டியடைக்கப்பட்ட நெல்வயல் | 1 | 0 | 10 | 17 | 50 |
| | | பிளான் இலக்கம் 3,788. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | | |
| 93664 | மருதடிச்சேனை | கே. நல்லதம்பியும் கே. கதிரவேலியும் | நெற்கேற்றது | 5 | 2 | 20 | 15 | 0 |
| | | பிளான் இலக்கம் 3,834. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | | |
| 93789 | இலங்கைத்துறை | சின்னத்தம்பி பொன்னையா | கேள்விக்காரனால் கட்டியடைக்கப்பட்டது, தென்னைக்கேற்றது | 1 | 2 | 36 | 15 | 0 |
| 93790 | ஷை | என். செம்பாத்தை | தென்னைக்கேற்றது | 1 | 0 | 37 | 15 | 0 |
| | | பிளான் இலக்கம் 3,789. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | | |
| 93666 | தோப்பூர் | வி. கதிராமர் | தோட்டத்துக்கேற்றது | 2 | 3 | 33 | 17 | 50 |
| | | பிளான் இலக்கம் 3,585. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | | |
| 92698 | மூதூர் | எஸ். அகமதுகாசிம் | தென்னைக்கேற்றது | 2 | 1 | 14 | 15 | 0 |
| 92701 | ஷை | ஷை | ஷை | 2 | 0 | 19 | 15 | 0 |
| 92706 | ஷை | — | ஷை | 2 | 1 | 0 | 15 | 0 |
| 92707 | ஷை | அல்லாப்பிச்சையும் மகனும் கட்டிப்பிடித்தது | ஷை | 0 | 1 | 24 | 15 | 0 |
| 92708 | ஷை | — | ஷை | 2 | 1 | 0 | 15 | 0 |
| | | பிளான் இலக்கம் 3,595. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | | |
| 92729 | இச்சிலம்பத்தை | காளியம்மை | நெற்கேற்ற வெட்டைத்தரை | 1 | 3 | 20 | 15 | 0 |
| 92730 | ஷை | ஷை | நெல்வயல் | 0 | 3 | 18 | 15 | 0 |
| | | பிளான் இலக்கம் 3,407. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | | |
| 92014 | இச்சிலம்பத்தை | — | தோட்டத்தரை | 0 | 0 | 15 | 35 | 0 |
| 92015 | ஷை | பத்தனுற்கட்டியடைக்கப்பட்டது | ஷை | 0 | 0 | 20 | 30 | 0 |
| 92016 | ஷை | திக்கிரியாற் கட்டியடைக்கப்பட்டது | ஷை | ) | 0 | 18 | 30 | 0 |
| 92017 | ஷை | முருகனுற் கட்டியடைக்கப்பட்டது | ஷை | 0 | 0 | 8 | 35 | 0 |
| | | பிளான் இலக்கம் 2,519. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | | |
| 76795 | மல்லிகைத்தீவு | — | தோட்டத்தரை | 0 | 2 | 25 | 15 | 0 |
| 76796 | ஷை | பாலாத்தையால் கட்டிப்பிடித்தது | ஷை | 0 | 0 | 5 | 15 | 0 |
| | | பிளான் இலக்கம் 2,520. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | | |
| 76797 | ஆனைத்தீவு | — | பழைய நெல்வயல் | 4 | 3 | 4 | 15 | 0 |
| | | பிளான் இலக்கம் 3,647. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | | |
| 93142 | மூதூர் | மாம்சாவால் கட்டியடைக்கப்பட்டது | நெற்கேற்றது | 2 | 2 | 18 | 25 | 0 |
| 93144 | ஷை | கே. மீராசாய்புவும் பி. மீராசாய்புவும் கட்டிப்பிடித்தது | ஷை | 8 | 0 | 34 | 25 | 0 |
| 93145 | ஷை | கே. மீராசாய்புவும் பி. மீராசாய்புவும் | ஷை | 1 | 1 | 24 | 17 | 50 |
| | | பிளான் இலக்கம் 3,649. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | | |
| 93148 | மூதூர் | பேதுருவயித்தி | நெற்கேற்றது | 7 | 2 | 36 | 20 | 0 |
| | | பிளான் இலக்கம் 3,658. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | | |
| 93164 | மூதூர் | கே. முகம்மதுத்தம்பி | கேள்விக்காரனால் கட்டிப்பிடித்தது, நெற்கேற்றது | 3 | 3 | 20 | 20 | 0 |

இந்தக் காணிகளைப்பற்றிய வேறே காரியங்கள் அறியவேணுமாகில் கவண்மேந்து ஏசன்று இடமும் படங்களைப்பற்றி அளவுகந்தோரின் பெரியதுரையிடமும் அறிந்துகொள்ளலாம்.

மகோத்தமரவர்களின் கட்டளைப்படி,

ஹியு கிளிவ்வோட்,
இராசாங்க லிகிதர்.

No. 1,133, E. P.

கொலோனியல் சக்கிறித்தார் ஆபிசில்,
கொழும்பில், 1907ம் ஸு கார்த்திகைமீ 16ந் தேதி.

1908ம் ஆண்டு தைமாதம் 15ந் தேதியாகிய புதன்கிழமை பகல் 1 மணிக்கு கீழ் மாகாணத்து திரிகோணமலை உதவி கவர்ணமேந்து ஏசன்றவர்கள் தனது ஆபிசில் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம், ஏலத்திற் கூறி விற்பார்.

33 காணித்துண்டுகள், கீழ் மாகாணத்து திரிகோணமலை டிஸ்திறிக்கின் கட்டுக்குளம் கிழக்கு கொட்டியாபுரப் பகுதியிலிருக்கின்றன.

பிளான் இலக்கம் 3,219. உரித்தாளி—அரசாட்சியார்.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | று. | ப. | நிர்ப்புவிலை ஏக்கரொன்றுக்கு. ரூ. | ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 88930 | புல்மோட்டை | றம்ளான் அசனுர் | நெற்கேற்றதரை | 2 | 1 | 30 | 15 | 0 |
| 88931 | டிெ | ஆர். அசனுர் சேர்த்துகட்டியதரை | நெற்தரை | 5 | 1 | 36 | 15 | 0 |
| 88932 | டிெ | உமறுக்கன்னி சுலுத்தான் | டிெ | 3 | 1 | 26 | 15 | 0 |
| 88933 | டிெ | கே. எம். அசனுமரக்காயர் கட்டியெடுத்ததரை | டிெ | 0 | 2 | 14 | 15 | 0 |
| 88934 | டிெ | உமறுக்கன்னிசுலுத்தான் கட்டியெடுத்ததரை | டிெ | 1 | 2 | 17 | 15 | 0 |
| 88935 | டிெ | அகமதுலெவ்வைஅலியார் கட்டியெடுத்ததரை | டிெ | 0 | 0 | 26 | 15 | 0 |
| 88940 | டிெ | கே. மதார்சாய்பு கட்டியெடுத்ததரை | டிெ | 3 | 3 | 4 | 15 | 0 |
| | | பிளான் இலக்கம் 3,675. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | | |
| 93216 | கும்புறுபிட்டி | வயித்தி மறுவல் | புகையிலைசெய்கைக்கேற்றதரை | 0 | 0 | 32 | 25 | 0 |
| | | பிளான் இலக்கம் 3,667. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | | |
| 93187 | கும்புறுப்பிட்டி | செல்லாச்சி | நெற்கேற்றதரை | 3 | 2 | 19 | 18 | 0 |
| 93187½ | டிெ | — | டிெ | 3 | 2 | 19 | 18 | 0 |
| | | பிளான் இலக்கம் 3,682. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | | |
| 93243 | மூதூர் | முத்தலிவாவா முகையதீன்பாவா | நெற்கேற்றதரை | 2 | 0 | 27 | 17 | 50 |
| 93244 | டிெ | கே. பீ. முகையதீன்பாவா | டிெ | 0 | 1 | 25 | 17 | 50 |
| 93245 | டிெ | டிெ | கேள்விக்காரனுல் சேர்த்துக் கட்டியதரை | 0 | 2 | 15 | 17 | 50 |
| 93246 | டிெ | முகையதீன்பாவாவும் மறுபேரும் கட்டிச்சேர்த்ததரை | நெற்தரை | 0 | 0 | 34 | 17 | 50 |
| | | பிளான் இலக்கம் 3,509. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | | |
| 92414 | பள்ளிக்குடியிருப்பு | கே. டபிள்யு. செல்லப்பா கட்டிச் சேர்த்ததரை | நெற்தரை | 0 | 0 | 18 | 30 | 0 |
| 92416 | டிெ | ஏ. பளணித்தம்பி | மேட்டுக்காணி | 4 | 2 | 10 | 15 | 0 |
| 93419 | டிெ | டிெ | டிெ | 2 | 2 | 38 | 15 | 0 |
| 92419b | டிெ | டிெ | மேட்டுத்தரை விற்பனவுக்கு | 0 | 0 | 16 | 15 | 0 |
| 92420 | டிெ | கே. எம். சின்னமரைக்காயன் கட்டிப்பிடித்ததரை | நெற்தரை | 0 | 2 | 10 | 30 | 0 |
| 92422 | டிெ | டிெ | டிெ | 0 | 0 | 36 | 30 | 0 |
| 92421 | டிெ | கே. எல். சதக்குலெவ்வை கட்டியெடுத்ததரை | டிெ | 0 | 1 | 16 | 30 | 0 |
| | | பிளான் இலக்கம் 3,686. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | | |
| 93270 | மருதடிச்சேனை | — | பீ. சின்னையா கட்டிசேர்த்த தென்னந்தோட்டத்துக் கேற்றதரை | 1 | 1 | 2 | 15 | 0 |
| 93271 | டிெ | ஏ. பீ. சின்னையா | தென்னந்தோட்டத்துக்கேற்றதரை | 1 | 3 | 1 | 15 | 0 |
| 93272 | டிெ | வீ. பாலக்குட்டி | டிெ | 1 | 0 | 24 | 15 | 0 |
| 93275 | டிெ | — | தோட்டத்துக்கேற்றதரை, பண்டாரமும் மறுபேரும் கட்டியெடுத்ததரை | 0 | 0 | 30 | 20 | 0 |
| | | பிளான் இலக்கம் 3,715. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | | |
| 93445 | திரியாய | கே. சண்முகம்பிள்ளை | விட்டுவைக்கவேண்டியது | 0 | 3 | 21 | — | |
| 93446 | டிெ | கே. ஒப்பிலாமணி | தென்னந்தோட்டத்துக்கேற்றதரை | 0 | 3 | 11 | 17 | 50 |
| | | பிளான் இலக்கம் 3,559. உரித்தாளி—அரசாட்சியார். | | | | | | |
| 92599 | மூதூர் | — | தென்னந்தோட்டத்துக்கேற்றதரை | 2 | 3 | 5 | 15 | 0 |
| 92600 | டிெ | — | டிெ | 3 | 2 | 28 | 15 | 0 |
| 92596 | டிெ | — | டிெ | 2 | 0 | 10 | 15 | 0 |
| 92603 | டிெ | — | டிெ | 2 | 2 | 33 | 15 | 0 |
| | | ஒழுக்குப்பணங்கட்டாத காணிகள். | | | | | | |
| | | பிளான் இலக்கம் 2,995. உரித்தாளி—தியாகு சிலுவேஸ்திரி. | | | | | | |
| 87733 & 87734 | மூதூர் | — | தோட்டத்தரை | 1 | 3 | 28 | 17 | 50 |

இந்தக் காணிகளைப்பற்றி வேறேகாரியங்கள் அறியவேணுமாகில் கவண்மேந்து ஏசன்று இடமும் படங்களைப்பற்றி அளவு கந்தோரின் பெரியதுரையிடமும் அறிந்துகொள்ளலாம்.

மகோத்தமர் அவர்களினது கட்டளையின்படி,

ஹியு கிளிவ்வோட்
இராசாங்க லிகிதர்.

# LAND ACQUISITION NOTICES.

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

[Galgamuwa, Kurunegala District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கல்கமுவாவில் ஒரு வாடிவீடு கட்டுகிறதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 3,332. குறிச்சி—கல்கமுவா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. பெ. |
|---|---|---|---|---|
| O 1253 | தனயாமவத்தை | வெளிநிலம் | கல்கமுவாவிலுள்ள கப்புறுகாமிலேகம | 1 2 30 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1907 ம் ௵ மார்கழி ௴ 23 ந் தேதியிலன்று ஒரு மணிக்கு குருநாக்கல்லில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருநாக்கல் கச்சேரி,
1907 ம் ௵ கார்த்திகை ௴ 20 ந் உ

ஜீ. எஸ். செக்ஸ்டன்,
வடமேல் மாகாணம் அரசாட்சி ஏசன்று.

---

[Galgamuwa, Kurunegala District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கல்கமுவாவில் ஒரு மருந்துச்சாய்ப்புக் கட்டுகிறதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதம படம 3,332. குறிச்சி—கல்கமுவா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. பெ. |
|---|---|---|---|---|
| P 1253 | டிஸ்பென்சரியவத்தை | வெளிநிலம் | கல்கமுவாவிலுள்ள கபுறுகாமிலேகமவும் ஐய்றுகாமியும் | 0 2 2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1907 ம் ஆண்டு மார்கழிமாதம் 23 ந் தேதியிலன்று பின்நேரம் 1 மணிக்கு குருநாக்கல்லில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருநாகல் கச்சேரி,
1907 ம ௵ கார்த்திகை ௴ 20 ந் தேதி.

ஜீ. எஸ். செக்ஸ்டன்,
வடமேல் மாகாண அரசாட்சி ஏசன்டு.

---

[Nettipolagama and Dewullewa, Kurunegala District.]

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் யாப்பாகுவில் பள்ளிக்கூடங் கட்டுகிறதற்கும் பிள்ளைகள் விளையாடுகிறதற்கு நிலத்துக்குமாக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 3,288. குறிச்சி—நெற்றிப்பொலகமவும் திவுள்ளெவயும்.

| காணித்துண்டின் இல. | காணியினது பெயர். | விவரம் | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. பெ. |
|---|---|---|---|---|
| M 1252 | கலகாவகேன | சேனை | நெற்றிப்பொலகம தென்னக்கோன் இறந்துபோன றட்டேமகத்மயா | 1 0 8 |
| N 1252 | டிெ | சிறுதென்னம்பிள்ளை தோட்டம் | பி. ஆர். முகம்மது காணி | 0 1 30 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1907 ம் ௵ மார்கழிமாசம் 23 ந் தேதியிலன்று ஒரு மணிக்கு குருநாகல்லில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருநாகல் கச்சேரி,
1907 ம் ௵ கார்த்திகை ௴ 20 ந் தேதி.

ஜீ. எஸ். செக்ஸ்டன்,
வடமேல் மாகாண அரசாட்சி ஏசன்டு.

[Thotakkadu, Mannar District.]

1876 ம் ஆண்டு 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மன்னார்ப் பட்டணத்துத் தண்ணீர்ச்சவுக்கியத்தை விர்த்திபண்ணுதல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அக்தாவது :—

பிரதமபடத்து இலக்கம் 3,380. குறிச்சி—தோட்டக்காடு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பே. |
|---|---|---|---|---|
| P 296½ | பாவடிச்சின்னத்துத்தரை அல்லது மணல்தோட்டம் | தோட்டம் | கப்பத்தம்பி கைம்பெண் முகம்மதுபீரா நாச்சியாவும் மற்றப்பேரும் | 1 0 8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டுத்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிமுட்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1907 ம் ஆண்டு மார்கழிமீ 20 ந் தேதியன்று 11 மணிக்கு மன்னார் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தந்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விபரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மன்னார் கச்சேரி,
1907 ம் ஆண்டு கார்த்திகைமீ 13 ந் உ.

ஜி. எவ். ஆர். பரவுனிங்,
உதவி அரசாட்சி ஏசண்டுக்காக.

[Tender for weighing and transporting Salt for Purchasers, Puttalam.]

“உப்பு விலைக்கு வாங்குபவர்களுக்கு நிறுத்து ஏற்றுமதி பண்ணிக் கொடுக்க” வென்று மேல் உறையில் எழுதி முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கை பண்ணிக்கொள்ள விரும்புகின்றவர்களிடமிருந்து புத்தளம் உதவி ஏசண்டு அவர்களால் 1907 ம் ஆண்டு மார்கழி மாதம் 14 ந் தேதி மத்தியானம் 11 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும், அக்தாவது :—

1. புத்தளம் உப்பு முற்றத்திலிருந்து விற்கப்படும் உப்பை பாரைக்காரர்களுக்கும் காத்தைக்காரர்களுக்கும் நிறுத்து ஏற்றுமதி பண்ணிக்கொடுக்கும் பணிவிடை.

(1) 1908 ம் வருஷத்துக்கு.
(2) 1908 ம், 1909 ம் வருஷங்களுக்கு.
(3) 1908 ம், 1909 ம், 1910 ம் வருஷங்களுக்கு.

கேள்விக்காரர் இதன் பின்னால் சொல்லப்படும் ஏற்பாடுகளை கவனிக்கவேண்டும் :

பாரைக்காரர்களுக்கும் காத்தைக்காரர்களுக்கும் உப்பு நிறுத்து ஏற்றுமதி பண்ணிக் கொடுக்க 1,000 அந்தர் உப்புக்கு என்ன விதம் கேளுமென்று கேள்விக்காரர் வெவ்வேறாய் விபரித்துக் காட்டவேண்டும்.

போதிய கூலி ஆட்களும் காத்தைகளும் கூலிக்குப் பிடித்து நாள் ஒன்றுக்கு 2,000 அந்தர் உப்பு நிறுத்து ஏற்றுமதி பண்ணிக் கொடுக்க கேள்விக்காரர் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

1908 ம் ஆண்டு தைமாதம் 3 ந் தேதி வேலை துவங்கப் படவேண்டும்.

ஒவ்வொரு கேள்விக்காரரும் கேள்விகேட்க முதல் கச்சேரியில் ரூபா 50 ஒப்பிக்கவேண்டும்; அவ்விதமே காசுகட்டாத ஒரு கேள்வியாவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கொந்திருத்தைச் சரியாக நடப்பிக்கிறதற்கு 1,000 ரூபாய் கொண்ட சட்டிப்புப்பெற்ற பிணைகொடுக்க அல்லது பொருத்த உடன்படிக்கைபண்ணிக்கொள்ளத் தவறினால், இந்தக் கட்டின பணம் கொவற்ணமேந்துக்காகப் பறிமுதலாக்கப்படும். பறிமுதலாக்கப்படாத கட்டின பணம் கேள்விக்காரருக்குத் திரும்பக் கொடுக்கப்படும்.

கொந்திருத்து அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்காகாக ஒவ்வொரு கேள்விக்காரன் தனக்குப் பதிலாய்ப் புத்தளத்தில் ஒரு பெயர்வழியின் மேல்விலாசத்தைக் கொடுக்க வேண்டியது.

இந்தக் கொந்திருத்தைச் சரியாக நடைபெறுகிறதற்காகப் பிணைக்கு ஏற்படுகிறதாகிய இரண்டு போதிய ஆள்களால் கையொப்பமிடப்பட்டு அவர்களின் மேல்விலாசமும் எழுதப்பட்ட கடிதம் ஒவ்வொரு கேள்விப்பத்திரத்துடனும் அணைத்திருக்கவேண்டியது.

கேள்வியில் வீதங்களையிட்டு ஏதும் மாற்றுதல் அல்லது திருத்தங்கள்பண்ணினால் அந்த இடத்தில் கேள்விக்காரனின் கையொப்ப அடையாளமிடப்பட்டிருக்கவேண்டும்.

கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதியொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபோர்ந்த கணக்குக் காரியத்தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி ஏசன்றத்துரை அவர்களுக்கு அனுப்பும் சமையம் கேள்விக்காரன் தவால் வழியாக அனுப்பவேண்டும்.

கேள்விக்கடதாசிகள் திறக்கப்படும் அன்று ஏதும் தேவையான கருமங்களையிட்டுப் பேசிக்கொள்வதற்காகக் கேள்விக்காரர் கச்சேரியில் சமுகமாயிருக்கவேண்டியது.

ச. கி. ஒல்நட்,
உதவி அரசாட்சி ஏசன்று.

புத்தளம் கச்சேரி,
1907 ம் ஆ கார்த்திகைமீ 19 ந் உ.

[Tender for License to Sell Opium by Retail, Negombo.]

1899 ம் ஆண்டு 5 ம் இலக்கச் சட்டத்து ஏற்பாட்டின்படியும் 1903 ம் ஆண்டு 14 ம் இலக்கச் சட்டத்தின் ஏற்பாட்டின்படியும் இதனுல்செய்யும் அறிவித்தல் வருமாறு :—

நீர்கொழும்பு லோக்கல்போட் எல்லைக்குள், 1908 ம் ஆண்டு ஜெனவரி (தை)மீ 1 ந் தேதி முதலாக டிசெம்பர் (மார்கழி)மீ 31 ந் தேதி வரையும் சில்லறையில் அபின் விற்பதற்கு லைசன்சு உத்தரவுகள் விற்பனவு செய்தற்காக கொழும்புக் கச்சேரியில் இந்த 1907 ம் ஆண்டின் (நவம்பர்) கார்த்திகைமீ 25 ந் தேதி மத்தியானம் 12 மணி வரையும் ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் மேல்மாகாணத்து ஒனறபிள் அரசாட்சி ஏசன்றால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விக்காரன் தானேயாவது முறைமையாக எழுத்தில் அதிகாரம்பெற்ற அவனது காரியஸ்தனாவது கொழும்புக் கச்சேரியில் 1907 ம் ஆண்டு (நவம்பர்) கார்த்திகைமீ 25 ந் தேதி மத்தியானம் 12 மணி நேரத்தில் வந்து சமுகமாயிருந்து தனது கேள்வித்தொகையில் மூன்றிலொரு பங்கு உடனே தானே கட்ட ஆயத்தமாயிருந்தாலொழிய யாதொரு கேள்விப்பத்திரமும் கவனிக்கப்படமாட்டாததாகும்.

3. இரண்டு மூன்று கேள்விகள் ஒரு சமமான தொகையாகக் கேட்கப்படும் பக்ஷத்தில் மேல்மாகாணத்து ஜனறபில் அரசாட்சி ஏசண்டு அவர் தமது இஷ்டப்படி பின்வரும் வகையின் ஒன்று செய்யலாம்:—

அந்தக் கேள்விக்காரர்கள் மாத்திரமே விலைவைத்துக் கேட்கும் பிரசித்த ஏலத்தில் உடனே தானே குத்தகையாக விற்கலாம், அல்லது புதுக் கேள்விப்பத்திரங்கள் தரும்படி கேட்கலாம், அல்லது 1899 ம் ஆண்டின் 5 ம் இலக்கமும் 1903 ம் ஆண்டின் 14 ம் இலக்கமுங்கொண்ட அபின் சட்டத்தின் விதிகளுக்கு இசைய அந்தக் குத்தகையை வேறுவகையில் முடிவாக்கலாம்.

4. கேள்விப்பத்திரம் ஒவ்வொன்றிலும் கேள்விக்காரனது முழுப்பெயரும் மேல்விலாசமும் கண்டு எழுதியிருத்தல் வேண்டும்.

5. மேல்மாகாணத்து ஜனறபில் அரசாட்சி ஏசன்றானவர் உயர்ந்ததொகைக் கேள்வியையாவது யாதேனுமொரு கேள்வியையாவது தாம் ஏற்றுக்கொள்வதாகக் கட்டுப்பாடுசெய்துகொள்கின்றாரல்லர்.

6. எவனுடைய கேள்விப்பத்திரம் அல்லது கேள்வியில் ஏற்கப்பட்டதாமோ, அவன் உத்தரவுபெறும் கோள்விலைக்காரனாகிறான், அவன் தனது கேள்வித்தொகையில் மூன்றிலொரு பங்கை உடனே தானே கட்டவேண்டும், இன்னும் பின்னுற் சொல்லப்படும் கட்டுப்பாடுகளுக்கு அமைந்து நடக்கவும் வேண்டும்.

7. கேள்விப்பத்திரத்தில் மாதிரிக்காகிதங்கள் கொழும்பு கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

சில்லறையில் அபின் விற்கிற லைசென்ஸ் உத்தரவுகள்—மூன்று.

சில்லறையில் அபின் விற்க உத்தரவுப்பத்திரங்கள் கொடுத்தற்கு ஏற்படுத்திய கட்டுப்பாடுகள்.

1. சில்லறையில் அபின் விற்க உத்தரவுவாங்கினவன் ஆனவன், தக்க அதிகாரமுடையவராலே வாங்கினவன் அவனென்று வெளிப்படுத்திய உடனே, தனது கேள்வித்தொகையில் மூன்றிலொரு பங்கை ரொக்கமாகக் கட்டிவிடுதல் வேண்டும். தக்க அதிகாரமுடையார் அந்தத் தொகையைப் பிணையாக வைத்துக்கொள்ளல் வேண்டும்; கடைசி நாலு மாதத்துத் தவணைப்பணத்துக்கல்லாமல் கேள்வித்தொகையின் தவணைப் பணமாக அதை உபயோகிக்கக்கூடாது. கேள்வித்தொகையைப் பன்னிரண்டு மாசத்துக்குஞ் சமமான தொகைப் பாகமாய்ப் பிரித்து குத்தகை யிருக்குமவரையும் மாசந்தோறும் கடைசித் தேதி நாளில் கொடுத்துவிடல்வேண்டும். முதலாந் தவணைப் பணத்தை 1908 ம் ஆண்டு ஜனவரி (தை)மீ 31 ந் தேதியில் கொடுத்துவிடல் வேண்டும். ஒரு தவணைப்பணம் நிலுவையாம்போது நாள் ஒன்றுக்கு நூற்றுக்கு வருஷாந்த மூன்பது வீதவட்டி கொடுத்தல் வேண்டும். உத்தரவு வாங்கினவனது வேண்டுகோளின்படி பிணைப் பணத்தொகையை அவனுக்குப் பிரியமான ஒரு வங்கியிலே நிலையாய் (டிச்செட்) போட்டுவைக்கலாம்; அதில் ஏதும் நஷ்டம் நேரிட்டால் அது அவன் பாரமாகும். குறித்த தவணைத் தேதியிலே பணங் கொடுக்கத்தவறினால் நஷ்டம் அவனது பாரமாக, தக்க அதிகாரமுடையவர் உத்தரவை மறுபடி விற்கலாம் அல்லது செல்லாமல் திற்கும் அத்தனை காலமளவு பாகத்தை விற்கலாம்.

2. இதனால் உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொண்ட பண்டசாலை அல்லது இடமானது இந்த உத்தரவுப் பத்திரத்துப் பக்கத்திலே பூரணமாக விவரித்துக் காட்டியிருக்கவேண்டியது; அப்படி விவரித்துக்காட்டிய இடத்திற்கேயல்லாமல் மற்றொன்றுக்கு இந்த உத்தரவுப்பத்திரம் பொருந்துவதன்று.

3. இதனால் உத்தரவுபெற்ற இடமானது வேறு எந்தக் கட்டடங்களோடாயினும் இடங்களோடாயினும் உட்புறமாகப் போக்குவரவு செய்யத்தக்கதாக இருக்க ஒண்ணாது.

4. இதனால் உத்தரவுபெற்ற இடத்தைத் துப்பரவாகவும் சுகவளமுடையதாகவும் வைத்திருத்தல் வேண்டும்.

5. தக்க அதிகாரமுடையவரால் எழுத்து மூலமாக இன்ஸ்பெக்டர் பரிசோதகராக நியோகிக்கப்பட்ட எவரொருவராயினும், இன்ஸ்பெக்டர் நிலைமைக்குக் கீழ்ப்படாத பொலீஸ் உத்தியோகஸ்தர் எவரொருவராயினும் கேட்கும்போது, இதனால் உத்தரவுப்பெற்ற இடத்தைப் பரிசோதனைக்காகத் திறந்து காட்டுதல் அவ்விடத்தைப் பொறுப்பாக உடையவனது கடமையாம். மேலும் அவன் தன் வசத்துள்ள அபினினது வரவுசெலவுக் கணக்கைப்பற்றிய சகல புத்தகங்களையும், காகிதபத்திரங்களையும், கணக்குத் தொகைகளையும் காட்டவும் கடமைப்பட்டவனாவன்; மேலும், அப்படிச்செய்யும்படி விசேஷமாகக் கேட்கப்பட்டால், பரிசோதனை காலத்திலே கையிருப்பில் அல்லது அவ்விடத்தில் உள்ள அபினையெல்லாம் இன்ஸ்பெக்டர் அல்லது பொலிஸ் உத்தியோகஸ்தர் முன்னிலையிலே நிறுக்கவுங் கடமைப்பட்டவனாவன்; மேலும் அவன் கையிருப்பில் உள்ள அளவிற்கும், பரிசோதனைக் காலத்திலே புத்தகக் கணக்கின்படி கையிருப்பில் இருக்கவேண்டிய அளவிற்கும் உள்ள யாதேனும் ஓர் வித்தியாசத்தைத் தன்னால் கூடிய மட்டும் விளங்கப்படுத்திக் காட்டவும் வேண்டும்.

6. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் சாப்பிடுதல் ஒண்ணாது.

7. இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் உள்ள யாதும் அபினைக் கலந்து கெடுத்தலாவது எவ்விதத்தும் பழுதுபடுத்தலாவது செய்ய ஒண்ணாது.

8. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதுங் குழப்பமான நடக்கைகளுக்கு இடங்கொடுக்க ஒண்ணாது.

9. குடியினால் வெறித்திருக்கும் அல்லது அபினால் வெறித்திருக்கும் எவனொருவனுக்காவது, தோற்றத்தளவில் பதினைந்து வயசுக்குட்பட்ட எவனொருவனுக்காவது, இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் கொடுக்க ஒண்ணாது.

10. மாலையில் எட்டு மணிக்கும் காலையில் ஆறு மணிக்கும் இடையிலுள்ள நேரங்களில், இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் ஒப்பிக்கவும் ஒண்ணாது, கொடுக்கவும் ஒண்ணாது, வாங்கிவைக்கவும் ஒண்ணாது.

11. இலக்கமிட்ட பக்கங்களுடையதாய்க் கட்டப்பெற்ற ஒரு கையிருப்புப் புத்தகம் ஆகிய ஸ்தொக் புத்தகம் ஒன்று, இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். இதனால் உத்தரவுபெற்ற இடத்துக்காக அப்படியான புத்தகப்பிரதியொன்று தக்க அதிகாரமுடையவர் உத்தரவுப்பத்திர மெடுப்பவனுக்கு அப்போது விலையில்லாமல் சும்மா

கொடுப்பார். புதுபுத்தகம் ஒன்று வேண்டுமானால், அதை உத்தரவுபெற்றவன் தக்கஅதிகாரமுடையவரிடத்தே விலை கொடுத்து வாங்கிக்கொள்ள வேண்டியது. அவரிடத்தே முந்தின புத்தகத்தை ஒப்பித்துவிடல் வேண்டும்.

12. சோடுக்கல் வாங்கல் நடைபெற்ற உடனே அபின் பெற்ற தொகையும் செலவான தொகையுமெல்லாம் கை யிருப்புப் புத்தகத்திலே கிரமமாக எழுதிவைத்திருக்கச்செய்வது உத்தரவுபெற்றவனது கடமையாம்; புத்தகத்தின் பத் திக் கோலங்களெல்லாம் சரிவர எழுதி நிரப்பியிருக்கவேண்டும். அன்றைத்தினத்து முதலிலும் முடிவிலும் கையிருப்பி லுள்ள தொகையைத் தெளிவுபெறக் காட்டியிருக்கவேண்டும்.

13. ஒவ்வோர் மாசத்து இரண்டாந் தேதியிலாவது அதற்கு முன்னேயாவது கையிருப்புப் புத்தகத்தின் சரியான பிரதியொன்றையும், 20 ம் கொந்திசின்படி வைத்திருக்கவேண்டிய புத்தகத்தின் சரியான பிரதியொன்றையும், பொலிஸ் இன்ஸ்பட்டர் பெரியதுரைக்கு அனுப்பிவைப்பதும் உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

14. தாம் பெற்றுக்கொள்ளும் அப்படிப்பட்ட சரியான பிரதிகளுக்காக உத்தரவுபெற்றவனுக்குப் பற்றுச்சீட்டுக் கொடுப்பது பொலிஸ் இன்ஸ்பட்டர் பெரியதுரையது கடமையாகும். உத்தரவுபெற்றவன் தான் சரியான பிரதிகளைத் தபாலில் அனுப்பிய ஒரு கிழமையினுள்ளே அந்தப் பற்றுச்சீட்டுத் தனக்குக் கிடைக்கப்பெறவில்லையென்றால், பொலிஸ் இன்ஸ்பட்டர் பெரியதுரைக்கு எழுதி அந்தச் சரியான பிரதிகள் கிடைத்தனவோ என்று விசாரித்து அவை தவறிவிட்டால் இணைப்பிரதிகள் கொடுப்பது அந்த உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

15. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே தான் வேலைபார்க்க நியமிக்கப்போகிறவர் இன்னார் இன்னார் என்று காட்டி ஓர் பேர்வழி டாப்பை உத்தரவுபெற்றவன் உத்தரவுபெறுதற்கு முன்னே தக்க அதிகாரமுடையவரிடத்தே ஒப் பிப்பது அவனது கடமையாகும். ஒவ்வொரு பணிவிடைக்காரன் முழுப்பெயரும் விவரமும் அவன் பார்ப்பது இன்ன வகையான பணிவிடையென்றும் அந்த டாப்பிலே விதந்து காட்டியிருத்தல்வேண்டும். அப்படிப்பட்டவர்கள் யாவரும் இருபத்தொரு வயசு சென்றவர்களாயிருத்தல் வேண்டும். அவர்கள் நல்ல நடக்கையுடையவர்களெனத் தக்க அதிகார முடையவர் திருப்திப்பட்டுக்கொள்ளவும் வேண்டும். தக்க அதிகாரமுடையவராலே இந்த உத்தரவுப்பத்திரத்தில் மாட் டறைந்த பேர்வழிகாரனல்லாத மற்றவனொருவனும் தன் கணக்கில் அபினைப் பொறுப்பெடுக்கவாவது பெற்றுக் கொள்ளவாவது, விலைப்படுத்தவாவது, உத்தரவுபெற்றவன் பணிவிடைபார்ப்பிக்க ஒண்ணாது; அப்படியே மாட் டறைவுபெற்ற பேர்வழிகாரனல்லாத எவனொருவனையும் மேற்கண்ட கடமைகளுள் யாதொன்றையுஞ் செய்யவிட ஒண்ணாது.

16. பணிவிடையாளர்க்கும் பேர்வழிகாரரது டாப்பிலே வேண்டியனவான மாற்றங்களைச் செய்தற்காக, உத்தரவு பெற்றவன் தக்க அதிகாரமுடையவரிடத்தே காலத்துக்குக்காலம் கேட்டுக்கொள்ளலாம்; அந்தமாற்றங்கள் இந்த உத் தரவுப்பத்திரத்திலே மாட்டறைந்திருத்தல் வேண்டும். இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே பணிவிடை பார்க்கும் எவனொருவனையும் நீக்கிவிடும்படியாகத் தக்க அதிகாரமுடையவரிடத்தேயிருந்து நொத்திஸ் அறிவித்தல் கிடைக்கப் பெற்ற உத்தரவுபெற்றவன், அந்த அறிவித்தல் கிடைத்த ஒரு கிழமையினுள்ளே, இந்த உத்தரவுப்பத்திரத்திலிருந்து அப்பணிவிடைக்காரனது பெயரை நீக்கிவிடும்படியாக, தக்க அதிகாரமுடையவரிடத்தே இந்த உத்தரவுப்பத்திரத்தைக் கொண்டுபோய்க் காட்டவேண்டும். அதன்பின் அப்படிப்பட்டவன் இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே பணிவிடை பார்ப்பதற்கு யோக்கியனாகமாட்டான்.

17. இந்த உத்தரவுப்பத்திரத்தின் இலக்கமும் உத்தரவுபெற்ற தனது பெயரும் "சில்லறையில் அபின் விற்க உத்தரவுபெற்றது" என்ற வாக்கியமும் தெளிவாய் எழுதின தொரு பலகையை, இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் எல்லார்க்கும் நன்றாய்த் தெரியக்கூடிய இடத்திலே பதித்துவைக்கச்செய்வது உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

18. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே அபின் அல்லது சுருட்டு விற்றலேயல்லாமல் வேறொரு வியாபாரமாவது தொழிலாவது நடப்பித்தல ஒண்ணாது.

19. அவ்விடத்திற்றானே கொடுத்த காசு ரொக்கத்துக்கல்லாமல் யாதொரு அபினும் விற்க ஒண்ணாது.

20. நாலு டிரும் நிறைக்கு அதிகமான அபினை விற்றபோதெல்லாம், அதை வாங்கினவனுடைய முழுப்பெயரை யும் மேல்விலாசத்தையும் விற்ற அளவையும் விற்ற தேதியையுங் காட்டி, கையிருப்புப் புத்தகத்திலே "குறிப்பு" பத்திக்க லத்திலே எழுதிவைப்பது உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

21. உத்தரவுபெற்ற இடத்திலே எந்த நேரங்களிலும் உபயோகிக்கிறதற்காக ஒரு கூட்டத் தராசுபடிகளும், கா ல் அவுன்ஸ், அரை அவுன்ஸ், ஒரு அவுன்ஸ், இரண்டு அவுன்ஸ், நாலு அவுன்ஸ், எட்டு அவுன்ஸ், ஒரு றுத்தல், இரண்டு றுத் தல், நாலு றுத்தல், ஏழு றுத்தலாகிய அவாட்டியோர்ச் சாமானிய தராசுநிறைகளையும் வைத்திருத்தல் வேண்டும்.

22. கணக்குப் புத்தகம் வைப்பதற்காக, உத்தரவுபெற்றவன் இதன் பின்னுற் சொல்லப்பட்ட விதிகளை அனுசரித் து நடத்தல்வேண்டும்:—

சில்லறையில் அபின் வியாபாரிகள் வைத்திருக்கவேண்டிய கையிருப்புப் புத்தகத்து மாதிரிப் பக்கம்:—

| தேதி. | | ரூ. | அ. | டி. | யாரிடமிருந்து பெற்றுக்கொண்டது. | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| ஜுனி 1.—கையிருப்பு அபின் பாக்கி | ... | 17 | 8 | 4 | | |
| பெற்றுக்கொண்டது | ... | 10 | 8 | 2 | | |
| மொத்தம் | ... | 28 | 0 | 6 | ... இலக்கம் 1 மொத்தவிலை யாளன் சுவாஎன்பிள்ளை | |
| கொடுத்தது ... | ... | 1 | 7 | 9 | | |
| கணக்குமுடித்து பாக்கி | ... | 26 | 8 | 13 | | |
| ஜுனி 2.—பெற்றுக்கொண்டது | ... | இல்லை | | | | |
| மொத்தம் | ... | 26 | 8 | 13 | | |
| கொடுத்தது ... | ... | 0 | 15 | 5 | | |
| கணக்குமுடித்து பாக்கி | ... | 25 | 9 | 8 | | |
| ஜுனி 3.—பெற்றுக்கொண்டது | ... | இல்லை | | | | |
| மொத்தம் | ... | 25 | 9 | 8 | | |
| கொடுத்தது ... | ... | 2 | 7 | 1 | | |

கையிருப்பு ஸ்தொக் புத்தகம் வைத்திருப்பதற்கான விதிகள்.

புத்தகத்தினுள்ளே முதலட்டையை அடுத்து இங்கிலிஷிலுந் தமிழிலுஞ் சிங்களத்திலும் இவ்விதிகளின் ஒவ்வோர் பிரதியாக மூன்றும், மற்றை இறுதியட்டையை அடுத்து அப்படியே பிரதி மூன்றுமாக, ஆறு பிரதிகளை வைத்துப் பெல மாகக் கட்டிவைத்திருத்தல் வேண்டும்.

அவாட்டியோர் நிறை.

| | | |
|---|---|---|
| 16 டிரும் | = | 1 அவுன்ஸ் |
| 16 அவுன்ஸ் | = | 1 றுத்தல் |
| 28 றுத்தல் | = | 1 குவாட்டர் |
| 4 குவாட்டர் | = | 1 கண்டிறற்வேற் |
| 20 கண்டிறற்வேற் | = | 1 தொன் |

குறிப்பு.—180 கிறேயின் 6·582 அவாட்டியோர் டிரும்களுக்குச் சரி; அதாவது 7 டிரும்களுக்குக் குறையும்.

ஒருவன் அபினைத் தன்வசம் வைத்திருக்கவாவது மொத்தத்தில் அதை விற்கவாவது உத்தரவுப் பத்திரங்கள் கொடுத்தற்கு ஏற்படுத்திய கட்டுப்பாடுகள் :—

1. இதனால் உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொண்ட பண்டசாலை அல்லது இடமானது இந்த உத்தரவுப்பத்திரத்தின் பக்கத்திலே பூரணமாக விவரித்துக் காட்டியிருக்கவேண்டியது ; அப்படி விவரித்துக்காட்டிய இடத்திற்கேயல்லாமல் மற்றொன்றுக்கு இந்த உத்தரவுப்பத்திரம் பொருந்துவதன்று.

2. இதனால் உத்தரவுபெற்ற இடமானது வேறும் எந்தக் கட்டடங்களோடாயினும் இடங்களோடாயினும் உட்புறமாகப் போக்குவரவுசெய்யத்தக்கதாக இருக்க ஒண்ணாது.

3. இதனால் உத்தரவுபெற்ற இடத்தைத் துப்புரவாகவும் சுகவளமுடையதாகவும் வைத்திருத்தல் வேண்டும்.

4. தக்கஅதிகாரமுடையவரால் எழுத்து மூலமாக இன்ஸ்பெக்டர் பரிசோதகராக நியோகிக்கப்பட்ட எவரொருவராயினும், இன்ஸ்பெக்டர் நிலைமைக்குக் கீழ்ப்படாத பொலீஸ் உத்தியோகஸ்தர் எவரொருவராயினும் கேட்கும்போது, இதனால் உத்தரவுபெற்ற இடத்தைப் பரிசோதனைக்காகத் திறந்து காட்டுதல் அவ்விடத்தைப் பொறுப்பாக உடையவனது கடமையாம். மேலும் அவன் தன் வசத்துள்ள அபினினது வரவுசெலவுக் கணக்கைப்பற்றிய சகல புத்தகங்களையும், காகிதபத்திரங்களையும், கணக்குத்தொகைகளையும் காட்டவும் கடமைப்பட்டவனாவன் ; மேலும், அப்படிச் செய்யும்படி விசேஷமாகக் கேட்கப்பட்டால், பரிசோதனை காலத்திலே கையிருப்பில் அல்லது அவ்விடத்தில் உள்ள அபின் யெல்லாம் இன்ஸ்பெக்டர் அல்லது பொலீஸ் உத்தியோகத்தர் முன்னிலையிலே நிறுக்கவுங் கடமைப்பட்டவனாவன் ; மேலும், அவன் கையிருப்பில் உள்ள அளவிற்கும், பரிசோதனைக் காலத்திலே புத்தகக் கணக்கின்படி கையிருப்பில் இருக்கவேண்டிய அளவிற்கும் உள்ள யாதேனும் ஓர் வித்தியாசத்தைத் தன்னால் கூடியமட்டும் விளங்கப்படுத்திக் காட்டவும் வேண்டும்.

5. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் சாப்பிடுதல் ஒண்ணாது.

6. இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் உள்ள யாதும் அபினைக் கலந்து கெடுத்தலாவது எவ்விதத்தும் பழுதுபடுத்தலாவது செய்ய ஒண்ணாது.

7. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதுங் குழப்பான நடக்கைகளுக்கு இடங்கொடுக்க ஒண்ணாது.

8. குடியினால் வெறித்திருக்கும் அல்லது அபினால் வெறித்திருக்கும் எவனொருவனுக்காவது, தோற்றத்தளவில் பதினைந்து வயசுக்குட்பட்ட எவனொருவனுக்காவது, இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் கொடுக்க ஒண்ணாது.

9. மாலையில் எட்டு மணிக்கும் காலையில் ஆறு மணிக்கும் இடையிலுள்ள நேரங்களில் இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் ஒப்பிக்கவும் ஒண்ணாது, கொடுக்கவும் ஒண்ணாது, வாங்கிவைக்கவும் ஒண்ணாது.

10. இலக்கமிட்ட பக்கங்களுடையதாய்க் கட்டப்பெற்ற ஒரு கையிருப்புப் புத்தகம் ஆகிய ஸ்தொக் புத்தகம் ஒன்று, இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். இதனால் உத்தரவுபெற்ற இடத்துக்காக அப்படியான புத்தகப்பிரதியொன்று தக்க அதிகாரமுடையவர் உத்தரவுப்பத்திரமெடுப்பவருக்கு அப்போது விலையில்லாமல் சும்மா கொடுப்பார். புதுப்புத்தகம் ஒன்று வேண்டுமானால், அதை உத்தரவுபெற்றவன் தக்க அதிகாரமுடையவரிடத்தே விலைகொடுத்து வாங்கிக்கொள்ளவேண்டியது ; அவரிடத்தே முந்தின புத்தகத்தை ஒப்பித்துவிடல் வேண்டும்.

11. கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற உடனே அபின் பெற்ற தொகையும் செலவான தொகையுமெல்லாம் கையிருப்புப் புத்தகத்திலே கிரமமாக எழுதிவைத்திருக்கச்செய்வது உத்தரவுபெற்றவனது கடமையாம் ; புத்தகத்தின் பத்திக்கோலங்களெல்லாம் சரிவர எழுதி நிரப்பியிருக்க வேண்டும், அன்றைத்தினத்து முதலிலும் முடிவிலும் கையிருப்பிலுள்ள தொகையைத் தெளிவுபெறக் காட்டியிருக்கவேண்டும்.

12. சென்ற மாசத்தில் நாள்தோறும் முதலிலும் முடிவிலும் உள்ள கையிருப்புத் தொகையையும் நாள்தோறும் பெற்ற தொகையையும் செலவழித்த தொகையையுங் காட்டி ஒரு கணக்குச் சுருக்கத்தைப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் பெரியதுரைக்கு ஒவ்வோர் மாசத்து இரண்டாந் தேதியிலாவது அதற்கு முன்னேயாவது அனுப்பிவைக்கச் செய்வதும் அவ்வுத்தரவுபெற்றவனது கடமையாகும்.

13. அவன் உத்தரவுபெற்ற ஆண்டையொவ்வொன்றுக்குமாக இந்தக் கணக்குச்சுருக்க மாதிரிக் காகிதங்கள் இருபத்துநாலைத் தக்க அதிகாரமுடையவர் உத்தரவுப்பத்திரம் கொடுக்கும்போது விலையில்லாமற் சும்மா கொடுப்பார். மேற்கொண்டு வேண்டிய அந்த மாதிரிக் காகிதங்களுக்கு விலைகொடுத்துத் தக்க அதிகாரமுடையவரிடத்தே வாங்கிக்கொள்ள வேண்டும்.

14. தாம் பெற்றுக்கொள்ளும் அப்படிப்பட்ட கணக்குச் சுருக்கம் ஒவ்வொன்றுக்குமாக உத்தரவு பெற்றவனுக்குப் பற்றுச்சீட்டுக் கொடுப்பது பொலீஸ் இன்ஸ்பெக்டர் பெரியதுரையது கடமையாகும். உத்தரவுபெற்றவன் தான் கணக்குச்சுருக்கத்தைத் தபாலில் அனுப்பிய ஒரு கிழமையினுள்ளே அந்தப் பற்றுச்சீட்டுத் தனக்குக் கிடைக்கப்பெறவில்லையென்றால், பொலீஸ் இன்ஸ்பெக்டர் பெரியதுரைக்கு எழுதி அந்தக் கணக்குச்சுருக்கங் கிடைத்ததோ என்று விசாரித்து அது தவறிவிட்டால் இணைப்பிரதியொன்று கொடுப்பது அந்த உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

15. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே தான் வேலைபார்க்க நியமிக்கப்போகிறவர் இன்னார் இன்னார் என்று காட்டி ஒரு பேர்வழி டாப்பை உத்தரவுபெற்றவன் உத்தரவு பெறுதற்குமுன்னே தக்க அதிகாரமுடையவரிடத்தே ஒப்பிப்பது அவனது கடமையாகும். ஒவ்வொரு பணிவிடைக்காரன் முழுப் பெயரும் விவரமும் அவன் பார்ப்பது இன்னவகையான பணிவிடையென்றும் அந்த டாப்பிலே விதந்து காட்டியிருத்தல் வேண்டும். அப்படிப்பட்டவர்கள் யாவரும் இருபத்தொரு வயசு சென்றவர்களாயிருத்தல் வேண்டும். அவர்கள் நல்ல நடக்கையுடையவர்களெனத் தக்க அதிகாரமுடையவர் திருப்திப்பட்டுக்கொள்ளவும் வேண்டும். தக்க அதிகாரமுடையவராலே இந்த உத்தரவுப்பத்திரத்தில் மாட்டறைந்த பேர்வழிகாரனல்லாத மற்றெவனொருவனும் தன் கணக்கில் அபினைப் பொறுப்பெடுக்கவாவது, பெற்றுக்கொள்ளவாவது, விலைப்படுத்தவாவது உத்தரவுபெற்றவன் பணிவிடைபார்ப்பிக்க ஒண்ணாது; அப்படியே மாட்டறைவுபெற்ற பேர்வழிகாரனல்லாத எவனொருவனையும் மேற்கண்ட கடமைகளுள் யாதொன்றையுஞ் செய்யவிட ஒண்ணாது.

16. பணிவிடைபார்க்கும் பேர்வழிகாரரது டாப்பிலே வேண்டியனவான மாற்றங்களைச் செய்தற்காக, உத்தரவுபெற்றவன் தக்க அதிகாரமுடையவரிடத்தே காலத்துக்குக்காலம் கேட்டுக்கொள்ளலாம் ; அந்த மாற்றங்கள் இந்த உத்தரவுப்பத்திரத்திலே மாட்டறைந்திருத்தல் வேண்டும். இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே பணிவிடைபார்க்கும் எவனொருவனையும் நீக்கிவிடும்படியாக தக்க அதிகாரமுடையவரிடத்தேயிருந்து நொத்தீஸ் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற உத்தரவுபெற்றவன், அந்த அறிவித்தல் கிடைத்த ஒரு கிழமையினுள்ளே, அந்த உத்தரவுப்பத்திரத்திலிருந்து அப்பணிவிடைக்காரனது பெயரை நீக்கிவிடும்படியாக, தக்க அதிகாரமுடையவரிடத்தே இந்த உத்தரவுப்பத்திரத்தைக் கொண்டுபோய்க் காட்டவேண்டும். அதன்பின் அப்படிப்பட்டவன் இதனால் உத்தரவுப்பெற்ற இடத்திலே பணிவிடைபார்ப்பதற்கு யோக்கியனாகமாட்டான்.

17. இந்த உத்தரவுப்பத்திரத்தின் இலக்கமும் உத்தரவுபெற்ற தனது பெயரும் காரியத்துக்குத் தக்கபடி "மொத்தவிலையில் அபின் விற்க உத்தரவுபெற்றது" அல்லது "அபின் வைத்திருக்க உத்தரவுபெற்றது" என்ற வாக்கியமும் தெளிவாய் எழுதினதொரு பலகையை, இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் எல்லார்க்கும் நன்றாய்த் தெரியக்கூடிய இடத்திலே பதித்துவைக்கச்செய்வது உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

18. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே பண்டசாலையாக உபயோகிக்கப்படும் அந்தப் பாகத்தை அறுக்கையாகப் பூட்டிவைத்திருத்தல் வேண்டும் ; பரிசோதக உத்தியோகஸ்தரும், உத்தரவுபெற்றவனும் இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் பணிவிடைபார்ப்பவனாக உத்தரவுப்பத்திரத்திலே மாட்டறையப்பெற்ற பேர்வழிகாரனும் அல்லாத மற்றெவனொருவனும் அதனுள்ளே போக்குவரவுசெய்தல் ஒண்ணாது.

19. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே அபின் வியாபாரமல்லாமல் வேறொரு வியாபாரமாவது தொழிலாவது நடப்பித்தல் ஒண்ணாது.

20. இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் உள்ள அபினை வெட்டித்திறவாத "போலை" யுருண்டைவடிவமாக வைத்திருத்தல் வேண்டும். வெட்டினதாகி அல்லது உடைத்ததாகி, அல்லது எவ்விதத்தும் திறக்கப்பட்டதாகியுள்ள போலை யுருண்டைகளை இந்த இடங்களில் ஏற்றுப் பெற்றுக்கொள்ளவும் ஒண்ணாது, வைத்திருக்கவும் ஒண்ணாது. உத்தரவுபெற்ற இடத்திலே எந்த நேரங்களிலும் உபயோகிக்கிறதற்காக ஒரு கூட்டந் தராசு படிகளும், கால் அவுன்ஸ், அரை அவுன்ஸ், இரண்டு அவுன்ஸ், நாலு அவுன்ஸ், எட்டு அவுன்ஸ், ஒரு றாத்தல், இரண்டு றாத்தல், நாலு றாத்தல், ஏழு றாத்தல் ஆகிய அவாடுபோய்ச் சாமானிய தரத்து நிறைகளையும் வைத்திருத்தல் வேண்டும்.

21. கணக்குப்புத்தகம் வைப்பதற்காக உத்தரவுபெற்றவன் இதன் பின்னாற் சொல்லப்பட்ட விதிகளை அனுசரித்து நடத்தல் வேண்டும்.

அபின் வைத்திருப்பதற்கும் அதை மொத்தத்தில் விற்பதற்குமாக உத்தரவுபெற்றவர்கள் மாசந்தோறும் இரண்டாந் தேதி முடியமுன்னே பொலீஸ் இன்ஸ்பெட்டர் பெரியதுரைக்கு அனுப்பிவைக்கவேண்டிய தினக்கணக்குச் சுருக்க மாதிரிக் காகிதம் :—

| தேதி. | | | | ரூ. அ. டி. |
|---|---|---|---|---|
| ஆனி | 1.—கையிருப்புத் தொகை ... | ... | ... | 120 0 0 |
| | பெற்றுக்கொண்ட தொகை | ... | ... | 80 0 0 |
| | | | | 200 0 0 |
| | கொடுத்தது | .. | ... | 72 0 0 |
| ஆனி | 2.—கையிருப்பு ... | ... | ... | 128 0 0 |
| | பெற்றுக்கொண்டது | ... | ... | — |
| | கொடுத்தது | ... | ... | — |
| ஆனி | 3.—கையிருப்பு ... | ... | ... | 128 0 0 |

அபின் வைத்திருக்கவாவது அதை மொத்தத்தில் விற்கவாவது உத்தரவுபெற்றவர்கள் வைத்திருக்க வேண்டிய கையிருப்பு ஸ்தொக் புத்தக மாதிரிக் காகிதம்.

| தேதி. | கையிருப்புத் தொகை. | பெற்றுக்கொண்டவைகள். | | கொடுத்தவைகள். | | | கணக்கு முடித்துக் கண்ட இருப்பு. |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெற்றுக்கொண்ட தொகை. | யாரிடமிருந்து பெற்றுக்கொண்டது. | யாருக்குக் கொடுத்தது. | கொடுத்த தொகை | கொடுத்த தொகை மொத்தம். | |
| | ரூ. அ. டி. | ரூ. அ. டி. | | | ரூ. அ. டி. | ரூ. அ. டி. | ரூ. அ. டி. |
| ஆனி 1 | 120 0 0 | 80 0 0 | இலக்கம் 1 மொத்தவிலையாளன் சுவான் பிள்ளை | இலக்கம் 1 சில்லறை விலையாளன், பாணந்துறை கென்றி பெறேரு ... | 7 8 0 | | |
| | | | | இலக்கம் 3. சில்லறை விலையாளன், வெள்ளவத்தை டேவிட்சிங்ஙோ ... | 14 8 0 | | |
| | | | | இலக்கம் 2. மொத்த விலையாளன், செட்டித்தெரு கதிரவேல் | 50 0 0 | 72 0 0 | |
| ஆனி 2 | 128 0 0 | | | | | | 128 0 0 |

கையிருப்பு ஸ்தொக் புத்தகம் வைத்திருப்பதற்கான விதிகள்.

புத்தகத்தினுள்ளே முதலட்டையை அடுத்து இங்கிலிஷிலுந் தமிழிலுஞ் சிங்களத்திலும் இவ்விதிகளின் ஒவ்வோர் பிரதியாக மூன்றும், மற்றை இறுதியட்டையை அடுத்து அப்படியே பிரதி மூன்றுமாக, ஆறு பிரதிகளை வைத்துப் பெலமாகக் கட்டிவைத்திருத்தல் வேண்டும்.

---

அவாடபோய் நிறை.

| | | |
|---|---|---|
| 16 டிறாம் | = | 1 அவுன்ஸ் |
| 16 அவுன்ஸ் | = | 1 றாத்தல் |
| 28 றாத்தல் | = | 1 குவார்ட்டர் |
| 4 குவார்ட்டர் | = | 1 கண்டிறற்வேற் |
| 20 கண்டிறற்வேற் | = | 1 தொன் |

கொழும்பு கச்சேரி,
1907 ம் ஞு கார்த்திகைமீ 14 ந் உ.

எல். டபிள்யு. ஹுத்,
அரசாட்சி ஏசண்டு.

[Supreme Court Criminal Sessions at Kandy.]

இலங்கைத்தீவிற் சங்கைபொருந்த சுப்பிரீங்கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கண்டி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிரீங்கோட்டாரால் வதுளை டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1907 ம் ஆண்டு மார்கழிமாதம் 2 ந் தேதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,
ஜீ. எவ். றெபெட்ஸ்,
பிஸ்காலுக்காக.

வதுளை பிஸ்கால் கந்தோர்,
1907 ம் ௵ கார்த்திகை ௴ 14 ந் தேதி.

---

[Destruction of Valueless Records, Court of Requests, Colombo.]

1886 ம் ஆண்டின் மார்கழிமாதம் 8 ந் தேதியைக்கொண்ட 48,001 ம் இலக்க முதலாய் 1890 ம் ஆண்டு ஆடிமாசம் 31 ந் தேதியைக்கொண்ட 58,366 ம் இலக்கம் வரையிலுமுள்ள கொழும்பு றெக்குவஸ்கோட்டின் பழைய பெறுமதியற்ற வழக்குப்புத்தகங்கள் யாவும் 1894 ம் ஆண்டின் 12 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் இத்தேதிமுதல் மூன்று மாதத்திற்குப் பிற்பாடு அழித்துப்போடப்படுமென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எந்த வழக்குகளிலேனும் உடந்தைபட்டவர்கள் எவராவது நேராகவாகுதல் தரணிமார்கள் மூலமாயாகுதல் பெட்டீஷ மூலமாயாகுதல் போதிய காரணம் காட்டி அவ்விதமான வழக்குப்புத்தகங்கள் அழிக்கப்படாதென்று உறுத்துப்பேசலாம்.

எம். எஸ். பின்று,
கொம்மிஷனர்.

கொழும்பு றெக்குவஸ் கோடு,
1907 ம் ஆண்டு கார்த்திகை ௴ 20 ந் தேதி.

---

[Election of Unofficial Members, Local Board, Jaffna.]

விளம்பரம்.

1898 ம் ஆண்டின் 13 ம் இலக்க ஸ்தானசங்கக் கட்டளைச் சட்டத்துக்கடங்க யாழ்ப்பாணப் பட்டணத்துக்கு அரசாட்சி உத்தியோகத்திலில்லாத மூன்று சங்கத்தவரைத் தெரிவுசெய்வதற் கோர் கூட்டம் 1907 ம் ஆண்டு மார்கழி மாதம் 14 ந் தேதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணக் கச்சேரியில் வைக்கப்படுமென்று பிரசித்த விளம்பரம் பண்ணுகிறேன்.

எவ். எச். பிரைஸ்,
அக்டிங் கவர்ண்மேந்து ஏசன்று.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1907 ம் ஆண்டு கார்த்திகை ௴ 14 ந் உ.

---

# UNOFFICIAL ANNOUNCEMENTS.

**தொழிலுக்குட்படாதவர்களின் அறிவித்தல்கள்.**

[C. J. Kanthappah.]

1907 ம் ஆண்டின் 1 ம் இலக்கச் சட்டத்தின் 8 ம் பிரிவின்படி மட்டக்களப்பு ஆரப்பத்தையிலிருக்கும் சின்னத்தம்பி யோசேப் கந்தப்பாவாகிய நான் மூன்று மாசங்களின்பின் மட்டக்களப்பு டிஸ்திறிக் முழுவதிலும் பிரசித்த நொத்தாரிஸ்வாகத் தமிழ்ப்பாஷையில் பணிவிடை நடத்திவர என்னை ஏற்றுக்கொள்ளும்படி மேன்மைதங்கிய காணிப்பதிவுக் கந்தோர் தலைவரிடம் (To the Honourable the Registrar-General) விண்ணப்பஞ்செய்ய எண்ணியிருக்கிறேனென்பதை இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

1907 ம் ௵ ஐப்பசி ௴ 5 ந் உ. சி. யோ. கந்தப்பா.